හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
**Department of Treasury Operations**

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල් අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Colombo 01, Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office
දුරකථන / தொலைபேசி / Telephone: +94 11 2484600, +94 11 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: +94 11 2484970, +94 11 2320042
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No.: TO/CFM/01/05/04
ඔබේ අංකය / உமது இல / Your Number:
දිනය / திகதி / Date: 2021.11.

**திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இலக்கம் 04/2020**

அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்ட செயலாளர்கள் யாவருக்கும்,

**2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செய்யப்படுகின்ற கொடுப்பனவுகளின் பொருட்டு ஒவ்வொரு அமைச்சுக்கும்/ திணைக்களத்திற்கும் வருடாந்த பணி முற்பண எல்லைகளை விதிப்பதற்காக தகவல்களை கோருதல்**

01. 2020.10.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக 2022 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த பணி முற்பண எல்லைகளை விதிப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் கீழ் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நி.ஒ.367/(அ) இற்கு அமைவான மதிப்பீடு ஒன்றை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள TOD/IMP/1, TOD/IMP/2, TOD/IMP/3, TOD/IMP/9, ஆகிய மாதிரி படிவங்களின் பிரகாரம் தயாரித்து தொடர்புடைய ஏனைய விபரங்களுடன் 2021.12.17 ஆம் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

02. இது வரை அரசாங்க நிறுவனங்களுக்கு செலவிடுவதற்கு முழு நிதியாண்டுக்காகவும் வழங்கப்படுகின்ற திறந்த அதிகாரத் தத்துவத்தை (Annual Warrant) 2022 ஆம் ஆண்டிலிருந்து காலாண்டுரீதியல் (Quarterly Warrant) வழங்குவதற்கு 2022 ஆம் ஆண்டிக்கான வரவுசெலவுத் திட்ட உரையினூடாக நிதி அமைச்சரினால் முன்மொழியப்பட்டுள்ளபடியினால் TOD/IMP/02 ஆம் இலக்க மாதிரி படிவத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள விபரங்ளை மிகச் சரியானதாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அறியத் தருகிறேன். மேலும் இது சம்பந்தமாக தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தினால்/ தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற அறிவுரைகளையும் கவனத்திற் கொண்டதன் பின்னர் தகவல்களை சமர்ப்பிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.

03. திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளும் ஆலோசனைகளும் அவ்வாறே மாற்றமின்றி காணப்படும்.

ஒப்பம்/எச்.சீ.டீ.எல். சில்லா
பணிப்பாளர் நாயகம்